# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1983 ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழக (திருத்த) ச் சட்டம்

---

*[1983, ஓகத்து மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1983, ஓகத்து மாதம் 19 ஆந் தேதிய இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

## 1983 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்த)ச் சட்டம்

[1983 ஒகத்து மாதம் 19ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ.27/82
1564

**1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைமாற்றீடு செய்தல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற, 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகள்.

6. (அ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் உயர்கல்வி நிறுவனம் ; அல்லது

(ஆ) கல்விசார் நிறுவனமொன்றை முகாமை செய்கின்ற ஏதேனும் பிரிவேனை,

பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியொன்றாக அத்தகைய உயர் கல்வி நிறுவனம் அல்லது கல்விசார் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்படவேண்டும் என பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாம். ஒழுங்குவிதி மூலம் பேரவையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுடன் அத்தகைய ஏதேனும் நிறுவனம் ஒத்திசையுமாயின் பேரவையானது அத்தகைய நிறுவனத்தைப் பதிவு செய்யலாம் :

ஆயின், முன்னணியிலுள்ள பிரிவேனைகளான வித்தியோதய, வித்தியாலங்கார ஆகியவற்றுள் ஒன்று அல்லது இரண்டும் முறையே தத்தம் பிரிவேனைகளிலே கல்வி நிறுவனங்களைத் தாபித்திருந்து தத்தம் பிரிவேனைகளிலுள்ள அத்தகைய கல்விசார் நிறுவனங்கள் பல்கலைக் கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக அங்கீகரிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்படல் வேண்டுமென பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்குமாயின், பேர

வையானது, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய நிறுவனங்களை, பல்கலைக் கழகத்தின் முதன்மையான இணைப்புக் கல்லூரிகளாகப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கல்லூரிகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதியுதவி அளித்தலும் வேண்டும்:

ஆயின், மேலும், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரிவேனை, பிரிவேனையில் ஏதேனும் கல்விசார் நிறுவனத்தைத் தாபித்திருந்து அத்தகைய கல்விசார் நிறுவனம், பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியொன்றுக அங்கீகரிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட வேண்டுமெனப் பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்குமாயின், பேரவையானது, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய நிறுவனத்தைப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கு நிதியுதவி அளித்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துகல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட " என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், " 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட" என்ற சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக,"1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துகல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பேரவையானது ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பேரவையானது சனாதிபதியின் ஒருப்பாட்டுடன் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் " என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, "ஒன்றிணைந்த கல்லூரி", "கல்விசார் நிறுவனம்", "உயர்கல்வி நிறுவனம்" என்பவற்றின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

' "இணைப்புக் கல்லூரி" என்பது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் உயர்கல்வி நிறுவனம் அல்லது பிரிவேனையொன்றினால் முகாமை செய்யப்படுவதும் இச்சட்டத்தின்கீழ் இணைப்புக்கல்லூரியொன்றாக அங்கீகரிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டதுமான ஏதேனும் கல்விசார் நிறுவனம் என்று பொருள்படும் ;

"கல்விசார் நிறுவனம்" என்பது பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்காகக் கற்கைநெறிகளை நடாத்துவதற்கென பல்கலைக்கழகத்தினால் ஏற்கப்படற்பாலனவான, அவசியமான வசதிகளைக்கொண்டுள்ள ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும் ; அத்துடன்

" உயர்கல்வி நிறுவனம்" என்பது பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்காகக் கற்கைநெறிகளை நடாத்துகின்ற ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும்.'.

6. முதன்மைச் சட்டவாக்கம் அச்சட்டவாக்கத்தின் முடிவில் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்துக்கு அட்டவணையொன்றைச் சேர்த்தல்.

"அட்டவணை (பிரிவு 6)

1. பின்வத்தை சத்தர்மாகர பிரிவேனை,
2. பலகல்ல சரஸ்வதி பிரிவேனை.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 159; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.